**மாத்தளை மாநகர சபை**
**மாத்தளை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 29 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 06 ஆந் திகதி மாநகர ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மாத்தளை மாநகர சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 1985 முதல் 2014 ஆம் ஆண்டிற்காக செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள் ரூபா 215,051 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஏனைய வருமானம் மற்றும் பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் என்பன ரூபா 849,540 ஆல் குறைத்து குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2015 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 278,535 ஆன செலவினம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்த காரணத்தினால் ஆண்டின் செலவினம் மற்றும் கடன்கொடுத்தோர் ரூபா 278,535 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) சபையின் வருமானமாக கணக்கிடக்கூடிய ரூபா 122,850 கூட்டுப்பெறுமதியான அனுமதிப்பத்திரக் கட்டணங்கள், வரித் தொகை மற்றும் ஏனைய வருமானம் என்பன இனங்காணப்பட்டு கணக்குகளில் சீராக்கம் செய்யாமல் வைப்புக்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(உ) சபைக்கு சொந்தமாக இருந்த நீர் வழங்கல் முறைமை 2001 ஆம் ஆண்டின் போது நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு கையளித்த போது ஊழியருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 80,091 ஆன ஊழியர் கடன் மற்றும் 2004 ஆம் ஆண்டின் போது ஒப்பந்தக்காரரிடமிருந்து சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 784,420 இழப்பீட்டுத் தொகையாக ரூபா 864,511 கூட்டுத்தொகை கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்படாமல் முற்பணமாக கணக்கீடு செய்த காரணத்தினால் மீளாய்வாண்டின் கடன்பட்டோர் மீதி ரூபா 864,511 குறைத்தும் முற்பண மீதி ரூபா 864,511 ஆல் கூடுதலாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2015 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 53,882 பெறுமதியான 04 நிலையான சொத்து விடயங்கள் மூலதனமாக்கப்படாதிருந்ததுடன், ரூபா 19,173 பெறுமதியான இலவச ஆயுர்வேத மருந்து இருப்புக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) 2015 ஆம் ஆண்டின் போதும் முன்னைய ஆண்டுகளின் போதும் ஏலவிற்பனை செய்யப்பட்டிருந்த ரூபா 1,665,568 கிரயப் பெறுமதியான 07 வாகனங்கள் மற்றும் கிரயமோ அல்லது கொள்விலை இனங்காணப்படாத மோட்டார் சைக்கிளொன்றையும் 02 இயந்திரங்களையும் கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2015 ஆம் ஆண்டிற்குரிய நிர்மாண மானியங்களின் பெறுமதி ரூபா 16,822,101 மற்றும் மூலதனச் செலவினம் ரூபா 27,470,996 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) பிளிசரு செயற்திட்டத்திற்காக 2015 ஆம் ஆண்டிற்குரித்தாக பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய ரூபா 8,200,000 தொகை கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்படாதன் காரணமாக கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) நிறைவேற்றப்படாதிருந்த ரூபா 1,028,685 மதிப்பீட்டுப் பெறுமதியான 4 நிர்மாணங்களின் கடன்கொடுத்தோரினுள் காண்பிக்கப்பட்டதன் காரணமாக கடன்கொடுத்தோர் மீதிகள் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 319,490,010 கூட்டுத்தொகையான 05 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அவற்றுக்குரிய பட்டோலைகளுக்கும் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 1,119,673 கூட்டுத்தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**1.3.3 கிடைக்க வேண்டிய கணக்குகள்**

2015 ஆம் ஆண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 05 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 57,509,898 ஆக இருந்ததுடன் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்வு செய்யப்படாமல் காணப்படும் ரூபா 4,802,812 மீதியொன்றும் அதில் உள்ளடங்கியுள்ளது.

**1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்**

2015 ஆம் ஆண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 05 கடன்கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 106,467,537 ஆக இருந்ததுடன் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் தீர்வு செய்யப்படாமல் காணப்படும் ரூபா 39,133,182 மீதியும் அதில் உள்ளடங்கியுள்ளது.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

(அ) தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 113,778,479 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

(ஆ) சபையின் நகர உறுப்பினர்களால் இரண்டு வாகனங்கள் 41 சந்தர்ப்பங்களில் 9196 கிலோமீற்றர் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டதற்காக ரூபா 118,435 தொகை செலவு செய்யப்பட்டிருந்ததுடன், சபையின் கடமைகளுக்காக அவ்வாகனங்களை ஈடுபடுத்தியமைக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்வற்றுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கைக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4.1, 4,2 மற்றும் 4.4 ஆம் பிரிவுகள் | 1999 முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஓய்வுபெற்றிருந்த 132 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 553,807 கூட்டுப்பெறுமதியான கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571(2) | 2008 மார்ச் 28 முதல் 2013 திசெம்பர் 08 ஆந் திகதி ரையான காலப்பகுதிக்குரிய ரூபா 682,747 கூட்டுப்பெறுமதியான 27 நானாவித வைப்பு மீதிகள் மற்றும் சபையினால் நிறைவேற்றப்பட்ட நிர்மாணங்களுக்குரிய 2 வருடங்களை விஞ்சிய ரூபா 1,206,522 பெறுமதியான 10% நிறுத்தி வைத்தல் தொகை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2015 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | 180 நாட்கள் தொடர்ச்சியான சேவைக்காலமொன்று காணப்பட்டதாக சபையின் வருகைப் பதிவேடு, சம்பள கொடுப்பனவு விபரங்கள் மற்றும் தனிப்பட்ட கோவைகள் என்பவற்றின் பிரகாரம் உறுதிப்படுத்தப்படாத இரண்டு உத்தியோகத்தர்களுக்கு 2014 நவம்பர் 18 ஆந் திகதி முதல் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்ததுடன், 2016 யூலை வரையிலும் சபை நிதியத்திலிருந்து சம்பளம் செலுத்தப்பட்டு வந்தன. |
| (ஈ) | 2010 மே 25 ஆந் திகதிய 04/2010 மற்றும் 2011 நவம்பர் 01 ஆந் திகதிய 04/2011 ஆம் இலக்க ஓய்வூதிய (திருத்த) சுற்றறிக்கை | 15 ஊழியர்களுக்குரிய அரச ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பான ரூபா 974,498 தொகை 1 வருடம் முதல் 7 வருட காலமாகவும் 2015 ஆம் ஆண்டினுள் மாகாண அரச சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட 35 ஊழியர்களுக்குரிய அரச ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பான ரூபா 4,898,065 தொகை 01 மாதம் 10 மாதங்கள் |

| | | |
|---|---|---|
| | | வரையான காலாகவும் சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்பாமல் வைப்புக்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்தது. |
| (உ) | 2011 மே 24 ஆந் திகதிய 02/2011 மற்றும் 2011 யூன் 20 ஆந் திகதிய 02/2011 ஆம் இலக்க (திருத்தம் 01) ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் 4.3 மற்றும் 2.2 ஆம் பந்திகள் | 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்து வரும் ரூபா 16,024,895 தொகை செலுத்த வேண்டிய உள்ளூராட்சி மன்ற ஓய்வூதிய பங்களிப்புத் தொகை மீதியொன்று காணப்பட்டது. |
| (ஊ) | 1984 நவம்பர் 20 ஆந் திகதிய 1984/19 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் 8.1 ஆம் பந்தி | நிலுவை வீதவரி சேகரிப்பிற்காக ஊக்குவிப்பு படிகளாக ரூபா 323,106 தொகை சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக செலுத்தப்பட்டிருந்ததுடன், அதில் சுற்றறிக்கையால் மேவுகை செய்யப்படாத 09 உத்தியோகத்தர்களுக்காக செலுத்திய 102,916 ஆன ஊக்குவிப்பு படிகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 25,024,503 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,503,620 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 9,520,883 ஆன அதிகரிப்பொன்றைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டிலும் முன்னைய 02 ஆண்டு காலப்பகுதியிலும் நடைமுறை விகிதம் திருப்திகரமான மட்டத்தில் காணப்படாதிருந்ததுடன் நடைபொறுப்பினை தீர்ப்பதற்கும் போதியளவு நடைமுறைச் சொத்துக்கள் சபையிடம் இல்லாதிருந்தமை அதில் தென்படுகின்றது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 ஆதனவரி

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த ஆதனவரி மீதி ரூபா 24,265,610 ஆக இருந்ததுடன், இதில் 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் இன்னும் அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை ஆதனவரி மீதி ரூபா 23,308,753 ஆக இருந்தது.

#### 2.3.2 நீர்க் கட்டணம்

சபையினால் பராமரித்துச் செல்லப்படும் நீர் வழங்கல் முறைமை 2001 ஆம் ஆண்டின் போது நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு கையளிக்கப்படும் சந்தர்ப்பம் வரை அறவிடப்பட

வேண்டியிருந்த ரூபா 4,802,812 நிலுவை நீர்க் கட்டண மீதியை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 1,424,944 தொகையும், முத்திரைக் கட்டணமாக ரூபா 24,892,330 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தன.

**2.3.4 ஏனைய வருமானம்**

சபைக்குரிய கிட்ஸ் பரடைஸ் சிறுவர் பூங்காவின் விளையாட்டு உபகரணங்களைப் பொருத்தி நடாத்திச் செல்வதற்காகவும் அவ்வுபகரணங்களை பயன்படுத்துவதற்காகவும் 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை முறையே ரூபா 2,206,275 தொகை, ரூபா 1,441,650 மற்றும் ரூபா 1,086,825 என சபைக்கு வருமானம் கிடைக்கப் பெற்றிருந்த போதிலும், வருமானத்தில் சீரான வீழ்ச்சியொன்று தென்பட்டதுடன், சபையால் பூங்காவின் வருமானம் குறைவடைந்தமை தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டு வருமானத்தை அதிகரிப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.4 மிகைக் கட்டணம்**

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அத்தியாயம்) ஏற்பாடுகளின் கீழ் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகைக் கட்டணங்களுக்குரிய 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 41,861 தொகை அறவிடவேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 1998 யூன் 12 முதல் 2007 திசெம்பர் 13 வரை 27 சந்தர்ப்பங்களில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 123,150 கூட்டுப்பெறுமதியான கேள்வி வைப்பு பணத்தை 08 ஆண்டுகள் முதல் 15 ஆண்டுகள் வரையான காலமொன்று வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் நன்கொடையாக கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 26,598,040 பெறுமதியான 03 இயந்திரங்களை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் தமகாவா விடுமுறைக் கேந்திரம் மற்றும் அம்பகஹமுல வியாபார கட்டிடத் தொகுதியில் சபைக்குள்ள சட்டரீதியான உரித்து தொடர்பாக உறுதியொன்றின் மூலமோ அல்லது கட்டளையொன்றின் மூலமோ உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1994 ஆம் ஆண்டு முதல் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 15 சந்தர்ப்பங்களில் வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 209,875 ஆன முற்பணத்தையும் சபையின் உத்தியோகத்தர்களுக்கு 2003 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை 24 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 322,118 ஆன முற்பணத்தையும் 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை

எடுக்கப்படாதிருந்ததுடன், அம்மீதியினுள் அதாவது ஒரே உத்தியோகத்தருக்கு ரூபா 3,962 வீதம் 12 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 47,544 ஆன தீர்வு செய்யப்படாத முற்பண மீதியொன்றும் காணப்பட்டன.

(உ) 1985 முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய கணக்காய்வுக் கட்டணங்களின் பெறுமதியான ரூபா 3,503,344 தொகை 2016 யூன் வரையிலும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், அதில் பட்டியலிடப்பட்ட திகதி முதல் 2 வருடங்கள் 28 நாட்கள் வரையான காலம் கடந்திருந்த ரூபா 3,114,737 ஆன மீதியொன்றும் காணப்பட்டன.

(எ) சபையில் சேவையில் ஈடுபட்டிருந்து இடமாற்றலாகிச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 505,050 ஆன கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) சபையில் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ள தொழிலாளர் ஒருவரின் 2012 சனவரி முதல் 2014 மே வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 87,120 ஆன ஓய்வூதியத்தை அவர் இந்தியாவில் வசிப்பதற்கு சென்றமையால் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அப்பணத்தை செலுத்துவதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுக்கவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இனங்காணப்படாத ரூபா 8,699,455 ஆன கடன் மீதிகள் வருடக் கணக்காக முற்கொண்டு வரப்பட்டு வந்ததுடன், செலுத்த வேண்டிய தரப்பினர் இனங்காணப்பட்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்குரிய கடன்கொடுத்தோர் ஒருவரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 7,605,288 தொகை 2016 யூன் 10 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாநகர சபை கட்டளை சட்டத்தின் (252 ஆவது அதிகாரம்) 36(i) உப பிரிவின் (iii) ஆம் பந்தியின் பிரகாரம் ஜனாதிபதியின் எழுத்துமூல இணக்கப்பாடொன்று இல்லாமல் மாத்தளை மாநகர சபைக்குரிய நாகொல்லவில் அமைந்துள்ள காணி, வியாபாரத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்காக 1988 ஆம் ஆண்டின் போது கேள்வி கோரப்பட்டு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 1997 சனவரி 12 ஆந் திகதிய 1977/2 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் முறையான குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடாமல் காணியின் 11 காணித் துண்டுகள் 10 நபர்களுக்கு ரூபா 446,117 கூட்டுப்பெறுமதியான தொகைக்கு கேள்வி கோரி குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. 11 குத்தகையாளர்களில் 09 பேர் திட்டத்தை அங்கீகரித்துக்கொள்ளாமல் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களுக்காக சபையின் மூலம் ஆதனவரி இலக்கமும் வழங்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிலத்திற்குரிய மதிப்பிடப்பட்ட குத்தகை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செயற்திட்ட தாமதம்

**மாத்தளை புகையிரத பொருட் களஞ்சியத்தில் பொது வியாபார நிலையமொன்றை நிர்மாணித்தல்**

மாத்தளை புகையிரத பொருட் களஞ்சியத்தின் கட்டிடத்தை நவீனமயப்படுத்தி சாலை வியாபாரிகளுக்காக பொது விற்பனை நிலையமொன்றாக மேம்படுத்துவதை ஆரம்பிப்பதற்கு, முன்னர் கைச்சாத்திருந்த குத்தகை உடன்படிக்கையிலிருந்து பழைய குத்தகை

ஒப்பந்தங்களிலிருந்து விலகி புகையிரத திணைக்களத்துடன் புதிய ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மாநகர முதல்வர், நகர ஆணையாளர் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகத்திற்கு இடையே 2013 ஆம் ஆண்டின் போது கைச்சாத்திடப்பட்டிருந்த திகதியற்ற புரிந்துணர்வு உடன்படிக்கையின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் அனைத்து நிர்மாண நடவடிக்கைகளும் 12 மாதங்களுக்குள் பூர்த்தி செய்து கட்டிடம் கையளிக்கப்பட்டதன் பின்னர் புரிந்துணர்வு உடன்படிக்கை இரத்தாவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 13 ஆம் பிரிவின் பிரகாரம் அந்த உடன்படிக்கையின் காலஎல்லையை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2015 திசெம்பர் இறுதி வரையிலும் மதிப்பீட்டின் ரூபா 1,615,003 பெறுமதியான 10 வேலை விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.4 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற கழிவுப் பொருள் வாரியபொலவத்த என்ற பெயருடைய காணியில் போடப்படுவதனால் பிரதேசத்தின் குடியிருப்பாளர்களால் சபைக்கு எதிராக தொடுக்கப்பட்டிருந்த வழக்கிற்காக 2008 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை சட்டத்தரணிகள் கட்டணமாக ரூபா 2,880,728 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வழக்கு நிறைவு பெற்றிருக்கவில்லை. இப்பிரச்சினைக்கு தீர்வொன்றாக கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக சபைக்குச் சொந்தமான வளங்களை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் கழிவுப்பொருளை அகற்றும் நடவடிக்கை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி 477 ஆம் இலக்க சேவை வழங்கல் உடன்படிக்கையின் கீழ் தனியார் நிறுவனமொன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அந்த உடன்படிக்கையின் பிரகாரம் இப்போதும் கழிவுப்பொருட்களை போடும் இடத்திற்கு எப்போதும் கழிவுப்பொருட்களை போட முடியாத போதிலும், சபை கழிவுகளை போட்டு பிரச்சினைக்குரிய நிலைமையொன்றாக காணப்பட்ட காணியிலேயே அந்நிறுவனத்தினாலும் கழிவுப்பொருட்கள் போடப்பட்டிருந்தன. அவ்வாறே உடன்படிக்கையின் நிபந்தனை மீறப்பட்டிருக்கையில் 2015 ஆம் ஆண்டினுள் உடன்படிக்கை செய்யப்பட்ட மொத்த தொகையான ரூபா 5,640,826 தொகை உரிய நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) UNESCAP நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ரூபா 4,500,000 ஆன நிதிஏற்பாட்டின் பேரில் மாத்தளை வீதியில் அமைந்துள்ள கூட்டுப்பசளை தொகுதி புகையிரத திணைக்களத்திற்கு உரித்தான காணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அக்காணியீன் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் கூட்டுப்பசளை தொகுதி, 2007 மே 01 ஆந் திகதி முதல் 30 வருடங்கள் குத்தகை முறைமையின் கீழ் ''செவனத'' பெயரில் நிறுவனத்திற்கு கூட்டுப்பசளை உற்பத்திக்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. குறித்த உடன்படிக்கையின் பிரகாரம் 05 ஆண்டுகளுக்கு 5 ஆண்டுகள் உடன்படிக்கை புதுப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 05 வருடங்கள் கடந்ததன் பின்னர் உடன்படிக்கை புதுப்பித்தல் மற்றும் கட்டணங்களை திருத்தம் செய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் வருமான மற்றும் செலவின விடயங்களுக்கிடையே நிதி ஏற்பாடு மாற்றப்பட்டதன் பின்னரும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான செலவினங்களுக்கிடையே கவனத்தில் கொள்ளக்கூடிய அளவில் முரண்கள்

அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(அ) 02 வருமான விடயங்களுக்காக ரூபா 2,050,000 ஆன மதிப்பிடப்பட்டிருந்த வருமானம் எதுவும் அறவிடப்படாதிருந்ததுடன், 07 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களுக்கிடையே 42 சதவீதம் முதல் 86 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

(ஆ) 46 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 6,455,500 தொகையான மொத்த நிதி ஏற்பாடுகளில் எவ்வித செலவினமும் செலவிடப்படாமல் மொத்த நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் 79 செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்குமிடையே 32 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டில் நிதிஏறபாடுகளை மிகைத்து 23 செலவின விடயங்களுக்கு ரூபா 34,446,159 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்காக மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 216 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மாநகர பிதாவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

1989 சனவரி 20 ஆந் திகதிய 541/17 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட உப விதியின் III ஆவது பகுதியின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் மாநகர சபையில் சுயாதீனமான தொடர்ச்சியான உள்ளகக் கணக்காய்வு முறைமையொன்று பேணப்படாதிருந்தது.

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய சிபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 ஆம் இலக்க உள்ளுராட்சி ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஓட்டத்தில் ஈடுபடக்கூடிய நிலைமையில் இல்லாத ரூபா 340,000 பெறுமதியான 02 வாகனங்களைத் திருத்தியமைத்து பயன்பாட்டிற்கு எடுக்கவோ அல்லது கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த பிளொக் கல் செயற்திட்டம் 2013 யூலை 08 ஆந் திகதி முதல் செயற்பாட்டு நிலைமையில் காணப்படாமல் இருந்ததுடன், அதற்காக பயன்படுத்தப்பட்ட ரூபா 168,789 பெறுமதியான பிளொக் கல் உற்பத்தி இயந்திரமொன்று பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்